753



# வண்டு விடு தூது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 FEB 1930
MADRAS

O-,18MSP7,V
N29
180500



உ

ஓம் சரவணபவ நம:

நீலாசலம், திருக்காந்தலின்கண்

அருணிலைக்கொண்டிலகும்

# ஸ்ரீ பால தண்டாயுதபாணிக் கடவுள்

# வண்டு விடு தூது.

இஃது

பிரம்மஸ்ரீ சிவதியானாநந்த மகரிஷிகள்

எனும்

ஸ்ரீ V. சிவசுப்ரமண்ய ஐயரவர்களின்

மாணவன்

வே. து. மு. சிவபாக்கியம் பிள்ளையால்

எழுதி

தமிழபிமானக் கனவான்களின் பேருதவியால்

வெளியிடப்பட்டது.

—

1929.

# முகவுரை.

வண்டினிடமாகத் தன் குறைகளைத் தீர்க்குமாறு யாதாமொரு தலைமகனிடத்துத் தூதாகச் செல்கவென யிசைத்துப் பாடுவது 'வண்டு விடு தூது' என்பதாம். இங்ஙனம் யாம் கொண்டத் தலைமகன் ஸ்ரீ பால தண்டாயுதபாணிக் கடவுள், ஆதலால் இச்சிறு பாசுரம் ஸ்ரீபால தண்டாயுதபாணிக் கடவுள் வண்டுவிடு தூது என்பதாயிற்று. இதுவே அடியேனின் முதலாவது முயற்சி. இதன்முன்னர் எழுதப்பட்டது சன்மார்க்கத்திற்குரிய மூன்று நாடகங்களும், நல்லொழுக்கம் பயக்கத்தக்கவொரு நாவலும், தமிழபிமானமுள்ள புண்யசீலர்களின் கருணையால் அச்சியற்றி வெளிப்படவேண்டியவையாயிருக்கின்றன. முதலாவதாக இத்தோத்திரப் பாசுரத்தை முத்திரிக்கத் தூண்டி, அடியேனுக்குப் பொருளுதவியும், இதகளிப்பு முண்டாக்கிய, குன்னூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் M. N. வைத்தியர் முதலிய பக்த சீலர்கட்கு அடியேன் பெரிதும் நன்றியறிதலுள்ளவளாக யிருக்கின்றேன். வருலாய சொற்பத் தொகையைக்கொண்டு, தம் சொந்த சிலவில் தமது பிரேசர் அச்சுக்கூடத்தில் அச்சியற்றி இதனை ஆதரித்த ஸ்ரீலஸ்ரீ R. T. கேசவலு EX-M.L.C. அவர்கட்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இது விஷயத்தில் உதவிபுரிந்த கனதனவான்களுக்கு ஸ்ரீ முருகக் கடவுளே கருணைபாலிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

இதன்கண் டலக்குற்றங்கள் வயப்படுமாயின், அஃதெம்மால் அறியாததாகும், அதனைக்குணமாகக் கொள்வது கற்றோர் கடனும்.

சிவபாக்கியம்.

உ

ஸ்ரீ கணேசாய நம:

## சாத்துக்கவிகள்.

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல் ஓம் அசலபீடம் உலோகோபகார வித்தியாதன சபையாரின் அபிப்பிராயம்.

எண்டிசையு மொருகுடையி லாண்டவசு ரன்றலையை
எற்றிச் செயித்த வேலன்
கண்டிகையுந் திருநீறு மொளிருமார் பழகனெனுங்
காந்தல்தண் டாயு தற்கு
வண்டுவிடு தூததிக மதுரரச மணங்கமழ
வள்ளலின் கருணை மலர
பண்டமிழாற் றசசுருதி பாடினனே சிவபாக்ய
பாவலன் பக்தி சீரே.

தத் ஸத்.

குன்னூர் திருவருள் நிலையம்

மகா-ா-ா-ஸ்ரீ N. ராமசாமி பிள்ளையவர்கள் கொடுத்த மதிப்புரைச் செய்யுள்.

பாக்கியத்தாற் கொடும்பிறவி பாரிடத்திற் படராமல்
பண்பு வாய்ந்த
பாக்கியத்தால் மனிதவுடல் படைத்துமே கமர்பால் போல்
பண்ண லின்றி
பாக்கியத்தால் தமிழுணர்வு பரப்பிடுவான் சிவபாக்ய
மெனும்பே ராளன்
பாக்கியத்தால் வண்டுவிடு தூதினையுங் குமரற்காப்
பகர்ந்த னானே.

உதகமண்டலம் சித்திரகவி நாவலர்

மகா-ா-ா-ஸ்ரீ V. M. பொன்னுசாமி பிள்ளை

யவர்களியம்பிய, ஆசிரிய விருத்தம்.

அத்துவித மாமுண்மை நெறியுணர்ந்தத் தொண்டர்களி
னகத்தே தங்கி
சித்திதரும் ஞானகுரு பாலதண்டா யுதபாணித்
திருபொன் னாட்கு
பக்திரசங் கசிந்தொழுகத் திரிதமிழின் பிரமனைத்தும்
பாக்கக் காண
முத்தனைத்த முதுமொழியால் வண்டுவிடு தூதினிது
முடித்து வொப்பில்

வரத்துயர்ந்தான் யாரெனில்தண் ணலைமடித்து
மணிபொதுக்கி
வளஞ்செய் சென்னைப்
பதியிருக்கும் புலவரெலாம் புகழ்ந்தாடப் பன்னூலும்
புதுக்க மேலாந்
திரத்துயர்ந்த செந்தமிழ்சா கரமாகும் முனிஸ்வாமி
சீர்த்தி யாவும்
விரியுலகில் விளங்கசெய வந்தசிவ பாக்யமெனும்
வித்வா னுமால்.

கலியாணபுரமெனும் பெங்களூர் ஸ்ரீ எம்பெருமானுர்
பக்தஜன ஸ்தாபகர்
ஸ்ரீ வீரராகவ தங்கமணி தாசர் அவர்களின் புதல்வரும்
ஷெடி சபையின் தலைவருமாகிய
மகா-ா-ா-ஸ்ரீ வீ த. இரத்தினசாமி பிள்ளை
யவர்களியம்பிய அறுசீரியம்.

நீர்மல்கு செஞ்சடையன் றந்தபால தண்டபாணி
விமலன் மீது
பார்மல்கு பலருநல முறவண்டு விடு தூது
பறுவற் சொற்றுன்

சேர்மல்கு ஜோதிடவா கடாரூட முனிசாமி
நீட வச்சேய்

சீர்மல்கு நாற்கவியுங் குலவுசிவ பாக்கியத்தே
சிகபா வலனே.

## இஃது

நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல், ஓம் அசல பீடம்
பிரம்மஸ்ரீ ஓம்பிரகாச ஸ்வாமிகளின்
பாதரேணு, காவேரிபூம்பட்டினம்
மகா-ா-ா-ஸ்ரீ குருஜோதி நா. வே. கிருஷ்ணஸ்வாமி
பிள்ளையவர்க ளியம்பிய

## வெண்பா.

1. அன்ப ரகத்தே யகலா திருந்துபவத்
துன்ப வினையின் றுரிசறுத்து — இன்பம்
பகருங குமரகுரு பாலதண்டப் பாணிக்
குகபகவன் றூட்குரிமைக் கொண்டு.

2. கொண்டவருண் மேலீட்டாற் கோதாற்றிப் பூவினைக்க
வண்டுவிடு தூது வழுத்தினனே — எண்டிசையும்
போற்றிப் புகழ்தருகும் பூவேலை மாநகரிற்
சாற்றவருஞ் சங்கத் தமிழ்.

3. தமிழாய்ந்த வல்லுனர்க டம்மோ டளாய்ந்துத்
தமிழ ருளமினிக்குந் தன்மைத் — தமிழ்சொல்
நலவர்க டாரூட ஞானபாண் டித்யம்
பிலிற்றுமுனி சாமிப் பிளை.

4. பிள்ளை அவர்கட் பிரபலப் புத்திரனு
யுள்ளச் சினேகத் துவப்புடைய — வள்ளற்
சிவபாக் கியத்தத் சிலைசீர்ச் சாதம்
நவமாக் கருதுமின் நாடு.

43
9-96

சிவமயம்.

"பதிவிரதா பூஷணம்" "அறிவானந்தன்"
"தமிழ்பிரகாசம்" "ஆதி திராவிடர் வரலாறு"
முதலிய நூற்களின் ஆசிரியர்
சென்னை
வித்வான் மகா-ள-ள-ஸ்ரீ
திரிசிரபுரம், ஆ. பெருமாள் பிள்ளையவர்கள் கூறிய

## சிறப்புப்பாயிரம்.

தெண்ணீர் திரைதாத் திகழ்முகிற் கவிகை
தண்ணீழ் பரப்பவுந் தளிர்சுனை சுரப்பவுந்
தாதவிழ் தாரினஞ் சதமுக நகைப்பவும்
போதவிழ் பரிதி புகழ்ந்துமேற் றூக்கி
வைத்தன னுங்கு வளர்ந்துயர் சயிலம்
மைத்தென வன்ன மாநீல் கிரிசார்
காந்தற் றிருத்தலங் கவின்பெறக் கருணை
மாரி யன்ன வரம்பொழி யண்ணல்
வாரி யன்ன வளங்கெழு தமிழ்சீர்
தொண்டர்க் கீந்து சுகந்தரு குமரன்
தண்டா யுதபா ணிக்கினி தாகச்
சொல்லும் பொருளுஞ் சுவைபட முயன்று
நல்லார் வயங்கொண் டொண்ணியற் றேர்ந்த
முறைபிற ழாது மொழிந்தனன் பைந்தார்
வண்டு விடுதூ தெனுமொரு நன்னூல்
விண்டான் காசி வியன்றலந் தருகுரு
திருஜெக நாதச் சீரியன் மரபில்
வருசிவா னந்த மகானடி யவனும்

கணிதநூ லொடுவா கடமுணர் பண்டிதன்
அணியிசைத் தமிழின் அயிற்சீர் பாடிக்
கந்தன் கழலைக் கனவிலு மறவா
அந்தண னெங்கோன் ஆசான் புலேயேற்
கம்மா னெனவிங் கவதரித் திருந்த
பெம்மான் வேலூர் து.முனி சாமிப்
பிள்ளை யவர்தன் பெட்பின் மகனர்
வெள்ளை யுளத்தோன் வேலவன் பத்தி
தவமே கொண்ட சிவபாக் கியமால்
நவமே யென்கோ நவின்றவிந் நூலே.

---

## அவையடக்கம்.

கானக் குயிலிசைமுன் காரண்ட மென்னவருண்
ஞானக் கழற்றமிழி ஞட்டினன்கொல்—ஆனல்
அருமக்கட் சொற்கண்டு அன்புறுத லன்றோ
பெருமக்க ளாற்கொள்ளும் பேறு.

---

## குரு ஸ்துதி.

### வெண்பா.

கண்ணுறு பூத்தக் கடவுள் அடிமலர்க்குப்
பண்ணுருந் தூது பகரவே — அண்ணல்
சிவதியா ஞனந்த தேசிகன்பொற் ருளைத்
தவநிலையாக் கொண்டேன் தலை.

---

உ

ஓம் சரவணபவ நம :

நீலகிரி திருக்காந்தல் எனும் தலத்திற்

றிருகோயிற் கொண்டிலகும்

## ஸ்ரீ பால தண்டாயுதபாணிக் கடவுள்

# வண்டு விடு தூது.

## விநாயகர் காப்பு.

வெண்பா.

பூந்தே னுகர்ந்தளிகள் பொன்னஞ் சிறகசைத்துக்
காந்தாரம் பாடுங் கவின்காந்தல் — சார்ந்து
அருள்விளைக்கும் பெம்மான் அறுமுகனைப் பாட
வருங்கருணை மாக்களிறு வாழ்த்து.

---

## ஸ்துதி.

எண்சீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நிலவரிசை வளங்கொழிக்கு நிகரில் நீல
நெடுஞ்சிகர மலையழகு நிரம்பப் பெற்ற
பலவரிசைத் திகழ்ந்தோங்கும் பதியாங் காந்தற்
பாலமர்ந்த தனிகோட்டுப் பரம னெங்கோன்
கலைவரிசை யுளநாட்டங் கருணை மாட்சிக்
கூரந்தொளிரும் பெருந்தகையார்க் க[illegible]றுந் தெய்வம்
புலவரிசைத் தமிழ்கொடுக்கும் புவன மெல்லாம்
போற்றிசைக்கு மொருக்களிற்றைப் புகந்து
வாழ்வாம்

1

## நூல்.

பன்னிருசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தாழை மடலைக் கிழித்தொழுகுந்
தனிதே னுகர்பொன் வண்டினங்காள் !
சால வளர்கற் பூரமுடன்
சந்தந் தேக்கு காரகிலுஞ்
சூழுங் கதம்ப மலர்ச்சோலை
துய்ய குறிஞ்சி வளநாட்டுத்
துணைவன கண்டீர் திருக்காங்கற்
றுலங்கு ஞான வருட்கோயில்
வாழுங் கடம்பன காமமேகயன்
வரதன குமரன் வடிவேலன்
வாகை மயின்மீ தேறிவரும்
வல்லா ருள்ளப் பூந்தவிசில்
ஆழுந் தகையி னருங்கமல
வம்போன் னடியி லறிவிலியென்
அல்ல லொழிய வருந்தமிழா
லஞ்சற் பணித்து வழைமினரோ !

2

தேடிக் குறிஞ்சி மலரேறிச்
செந்தா தருந்துஞ் சுரும்பினங்காள் !
சேவற் றுவஜம வலங்கொண்ட
சேம நிதியைச் சுரர்பதியை
நீடுஞ் சயிலத் திருக்காந்தல்
நிறைபே ரொளியாய் நின்றிலகு
நிலையை ஞானச் சுடர்க்கொழுந்தை
நித்யா னந்தப் பெருவெளியி

லாடுங் குகனை யன்பரிதங்
அமைந்தப் பேற்றை யாரமுதை
அம்பாள் கௌரி தருமணியை
அறுமீன் கலச முலையருந்தும்
பீடு தழைத்த பெருந்தகையைப்
பெரிது வழைத்துப் பேரடியில்
பேதை யேழை யாயினுமென்
பிழையைப் பொறுக்கப் பேசுமினே !

3

சீத புனல்வாய்த் திரண்டோங்குஞ்
செந்தா மரையி னறவெடுத்துச்
சேரப் பறந்து மணிசிறகால்
சிவிறி தெளித்துச் செவிக்கினிய
கீத மரற்று மதுகரங்காள் !
கிள்ளா மலர்க்கொண் டஞ்சலித்து
கிளர்நிட் டானு பூதியெனுங்
கிட்டா நிலையி லயப்பட்டார்
வேக முரச மறைக்காந்தல்
விமலன் சுதன்வி சாகேசன்
விஞ்ஞைக் கிறைவ னஞ்சலிக்கு
வேழ முகநற் சோதரனின்
போத மலர்க்கண் ணீண்டேகி
புல்லேன் பொல்லாப் பவப்பிணியில்
பொதிந்த நாயேன் வழிப்படவே
புகழ்ந்து பாடி யழைமினரோ !

4

ககன மண் ணுங் கலங்தோச்சுங்
காலப் பதுமா சூர னுடன
கனத்த வரக்கர் பெருவெள்ளங்
கரையப் பண்டு முனிந்தெழுந்து

துகள வைவேல் விட்டழித்த
சுப்ர மண்யா! துரைவேலா!
துய்ய வளஞ்சேர் நகர்காந்தற்
றேன்றுஞ் சிவசங் கரன்பாலா!

தகரக் குழல்பூங் குறவள்ளி
தழுவுந் தடந்தோ டனிவேந்தே!
தண்டா யுதமும் நமவென்று
சரணந் துதிப்பார்க் கிதமேயாச்

சுகமே தருவன் குமரகுரு
துய்ய மறைசெங் கழலணித்தே
சுழலப் பறந்து விளையாடிச்
சொன்மோ குறையைச் சுரும்பினமே!

5

சமய மோரம்புஞ் சடாட்சரனைச்
சான்றோ ரேத்துங் குருபரனைச்
சதுரா கமத்தி னுட்பொருளாய்த்
தழைந்த ஞானத் தாரகனை

இமய வல்லித் திருச்சுதனை
யேக நித்ய நிருமலனை
இஷ்ட காமி யார்த்தமெலா
மியங்க வருளுந் நாயகனைக்

கமல நயனன் மருமகனைக்
கருது மடியார்க் கெளியவனைக்
கால னணுகாச் சிவசத்தி
கரத்தே கொண்டு காப்பவனை

நிமல நிதியாய்த் திருக்காந்தல்
நிறைந்த செவ்வேள் தனைப்பணிந்து
நீக்க மறவென் குறையெல்லா
நெறியாய்ச் சொன்மின் சுரும்பினமே!

6

தண்ணென் றலரு மலர்மாந்தித்
தாகந் தணியு மளியினங்காள் !
சாம வேதா கமங்களிலுந்
தானுய்ச் சமைந்த தற்பரமே !
கண்ணே ! மணியே ! காமரும்பூங்
கலையும் பிடியுங் கலந்தணைக்குங்
கனிவு சிறந்த யீராறுக்
கமல நயனக் கதிரவனே !
எண்ணும் பொழுது வெதிர்தோன்று
மேக பரமே ! யின்னமுதே !
எழிற்சேர் காந்தல் நகரோங்கு
மின்பே ! வன்பே ! ஏழிசையின்
பண்ணே ! பச்சைப் பசுங்கொடியாள்
பயந்த ஞானச் சிவக்கொழுந்தே !
பண்பே ! வருதி யெனவிசைத்துப்
பதிதன் குறையைப் பகருமினே !

7

கள்ள மறவின் முகடோம்பிக்
கான மிசையுந் தவத்தோர்கள்
கருத்தி லுதிக்குங் காரணமே !
காணற் கெட்டாத் தேசிகமே !
புள்ளி மயின்மே லாடிவரும்
பொருப்பே ! புந்திப் பூரணமே !
புங்க ஞான சாகரமே !
பூவே ! மணமே ! புராதனமே !
தெள்ளு வண்ணத் தமிழென்னுந்
தெரியற் பூணுஞ் சின்மயமே !
சித்தே ! சித்திற் சிறந்தெழுந்த
சிறப்பே ! தெய்வ நாயகமே !

மெள்ள வருதி யெனவழைத்தேன்
மிடிமைத் தவிர்க்கச் சொல்லுமினே!
மேலோ ருய்யுந் திருக்காந்தல்
விளங்கு நீல வண்டினமே!

8

கந்தங் கமழு மலர்வாவிக்
கண்ணைப் பறந்து விளையாடி
காந்தள் பூந்தா மரைமுல்லை
களிலுங் கலந்துக் கலந்தோடிக்
குந்திக் கிட்டா நறுந்தேனைக்
குளிர மாந்தி யிசைக்கூட்டிக்
கோலத் தனிமென் சிறகசைத்துக்
குன்றங் குன்ற மேற்பாய்ந்து
சந்தந் தொடுத்துச் சரவணனைச்
சார வழைத்துப் பொன்னடியில்
சாந்து புழுகு மலர்சாற்றிச்
சலன மறவெண் ணீறிட்டுச்
சிந்தை யுருகப் புகழ்போற்றிச்
சீர்கற் பூரச் சுடராற்றிச்
சிறிய னெனது குறையகலத்
திருக்கண் ணோக்கச் செப்புமினே!

9

மாயாக் கவலை தனிலாழ்ந்து
மயங்கி நலியு மெளியேன்காண்
மத்த மதியா னல்லோரை
மதியா திட்டம் போலுழன்று
சாயா நிலையோ ரஞ்சவிக்கும்
சாமி நினது திருமலர்தா
டன்னை மறந்தின் னுள்வரைக்குந்
தடித்தேன் பொல்லாப் புகணிறைந்து

ஓயாச் செல்வ முவந்தருளு
முபயச் செந்தா மரைக்கழலை
யுதவி யடிமை பணிசெய்ய
வோதக் கடன்மேற் றுயில்கின்ற
ஆயன் மருகன் அறுமுகவன்
அமரர் சேனு பதிமுருகன்
அம்பொன் காந்த லும்பன்வர
அழைத்திச் செழித்த வரியினமே!

10

சீர்த்தி மலியுந் திருக்காந்தல்
தேவா வருகத் தெள்ளமிர்தத்
தேனே வருக சிவைமகிழுஞ்
சேயே வருக சிவமணியே
கார்த்தி கேய வருகவே
கண்ணே மணியே வருகவே
களங்க மின்றி யுலகெங்குங்
கலந்து நிற்போய் வருகவே
தூர்த்த னெனது துயரொழியத்
தோகை மயின்மேல் வருகவே
சுத்தா வருகத் தண்டமிழின்
சொருபா வருக வென்றிசைத்து
பார்த்த சார தியின்மருகன்
பால தண்டா யுதக்கடவுள்
பாத மலர்க்கண் ணீண்டேகிப்
பரவி யழைமின் வண்டினமே.

## போற்றி விருத்தம்.

தண்ணகை முகமும் போற்றி
　　தகைவிழிக் கருணை போற்றி
எண்ணருஞ் சமயத் துள்ளு
　　மிலங்குவெண் ணீறும் போற்றி
வண்ணவேற் றாங்கி நல்கும்
　　வரதபூங் கரங்கள் போற்றி
கண்ணகன் றிலகுங் குன்றக்
　　காந்தவேள் கமலம் போற்றி.

---

## வாழி விருத்தம்.

வாழ்க நித்ய மங்கள
　　வளங்க ளோம்பி மாநிலம்
வாழ்க வேத கீதமோடு
　　வாய்மைக் குன்று வேந்தரும்
வாழ்க நூற்ப ரவசெய்த
　　வல்ல புண்ய சீலரும்
வாழ்க பால தண்டபாணி
　　வள்ள லாசி நீடியே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

பிரேசர் பிரஸ், குன்னூர்.